பிரசார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4

**20 02 2026 FRIDAY 7.15 PM**

ஆகாஷவாணி

## தலைப்புச் செய்திகள்

1. மொரிஷியஸ், ஸ்லோவேக்கியா உள்ளிட்ட உலக நாடுகளின் தலைவர்களுடன் பிரதமர் திரு நரேந்திர மோடி இன்று இருதரப்பு பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.
2. நாட்டின் எல்லைப்பகுதி மேம்பாட்டிற்காக மத்திய அரசு பல வளர்ச்சித் திட்டங்களை செயல்படுத்தி வருவதாக உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா கூறியுள்ளார்.
3. தமிழகத்தில் விமான கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கு தேவைப்படும் நிலத்தை மாநில அரசு கையகப்படுத்தித் தர வேண்டும் என்று சிவில் விமான போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு ராம்மோகன் நாயுடு கூறியுள்ளார்.
4. அணுசக்தி ஒப்பந்தத்தில் கையெழுத்திடுவது குறித்து 15 நாட்களுக்குள் ஈரான் முடிவெடுக்க வேண்டும் என்று அமெரிக்க அதிபர் திரு டோனல்டு ட்ரம்ப் எச்சரித்துள்ளார்.
5. பெங்களூரு சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் **Vaishnavi Adkar** அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<<<<<>>>>>>>>

செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்ப உச்சிமாநாட்டில் கலந்து கொண்டுள்ள உலக நாடுகளின் தலைவர்களுடன் பிரதமர் திரு. நரேந்திர மோடி, இன்றும் ஆலோசனை நடத்தினார்.

மொரீசியஸ் பிரதமர் டாக்டர் நவீன்சந்திர ராம்கூலத்தை சந்தித்துப் பேசிய பிரதமர் திரு. நரேந்திர மோடி, இருதரப்பு உறவுகளை வலுப்படுத்துவது குறித்து பேச்சு நடத்தினார்.

வளர்ந்து வரும் தொழில்நுட்ப மேம்பாடு, இருநாட்டு மக்களுக்கு இடையேயான தொடர்புகள் உள்ளிட்ட விஷயங்கள் குறித்து அவர்கள் பேச்சு நடத்தினர்.

இந்தியா-மொரீசியஸ் சிறப்பு பொருளாதார தொகுப்பு திட்டங்கள் குறித்தும் ஆலோசனை நடத்தினர்.

மகாசாஹர் திட்டம் மற்றும் அண்டை நாட்டிற்கு முன்னுரிமை அளிக்கும் கொள்கையின் அடிப்படையிலும் மொரீசியஸ் நாட்டின் வளர்ச்சித் திட்டங்களை மேற்கொள்ள இந்தியா உறுதிபூண்டுள்ளதாக பிரதமர் தெரிவித்தார்.

ஸ்லோவோக்கியா குடியரசின் அதிபர் திரு. Peter Pellegrini-யை சந்தித்துப் பேசிய அவர், வர்த்தகம், முதலீடு, மின்னணு தொழில்நுட்பம், பாதுகாப்பு, விண்வெளி, எரிசக்தி, கலாச்சாரம் உள்ளிட்ட துறைகளில் இருதரப்பு ஒத்துழைப்பை மேம்படுத்துவதற்கான வாய்ப்புகள் குறித்து ஆலோசித்தார்.

இருநாட்டு மக்களுக்கு இடையேயான தொடர்புகள் குறித்தும் விவாதிக்கப்பட்டது.

இந்தியா – ஐரோப்பிய யூனியன் இடையேயான தடையற்ற வர்த்தக ஒப்பந்தத்தின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் விவாதித்தனர்.

இருதரப்பினருக்கும் பயனளிக்கும் வகையில், மின்னணு தொழில்நுட்பம் உட்பட முக்கியத் துறைகளில் மேற்கொள்ளப்பட வேண்டிய திட்டங்கள் குறித்தும், ஸ்லோவோக்கிய அதிபருடன் பிரதமர் திரு. நரேந்திர மோடி ஆலோசனை நடத்தினார்.

இலங்கை அதிபர் திரு. அனுரகுமார திசநாயகே-யுடன் இருதரப்பு உறவுகள் குறித்து பிரதமர் திரு. நரேந்திர மோடி ஆலோசனை நடத்தினார்.

இதுகுறித்து, பிரதமர் வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில் எரிசக்தி, போக்குவரத்து, உள்கட்டமைப்பு மேம்பாடு, மருத்துவம், திறன் மேம்பாடு, கலாச்சாரம், நீலப்பொருளாதாரம் உள்ளிட்ட துறைகளில் இருதரப்பு ஒத்துழைப்புக்கான வாய்ப்புகள் குறித்தும் இலங்கை அதிபருடன் விவாதிக்கப்பட்டதாக தெரிவித்துள்ளார்.

இந்திய இலங்கை உறவுகளை மேம்படுத்துவது குறித்தும் இரு தலைவர்களும் இந்த சந்திப்பின் போது விவாதித்தனர்.

<<<<<<<<>>>>>>>

அஸ்ஸாம் மாநிலத்தில் இந்திய – பங்களாதேஷ் எல்லைப் பகுதியில் அமைந்துள்ள Notanpur-ல் எழுச்சிமிகு கிராமங்கள் இரண்டாம் கட்டத் திட்டத்தை உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா இன்று தொடங்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் பேசிய அவர், நாட்டின் எல்லைப் பகுதியின் மேம்பாட்டிற்காக பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையிலான அரசு, பல்வேறு வளர்ச்சித் திட்டங்களை செயல்படுத்தி வருவதாக கூறினார்.

நாட்டின் 17 மாநிலங்களில் உள்ள 334 தாலுகாக்களில் எழுச்சிமிகு கிராமங்கள் செயல்படுத்தப்படவுள்ளதாக அவர் தெரிவித்தார்.

இதனால், 140 எல்லைப்புற கிராமங்கள் உட்பட இரண்டாயிரத்திற்கும் மேற்பட்ட கிராமங்கள் பயன்பெறும் என்று அமைச்சர் கூறினார்.

இந்திய – பாகிஸ்தான் எல்லைப்பகுதியில் அமைந்துள்ள கிராமங்களிலும் இந்த திட்டம், தொடங்கப்பட்டிருப்பதாக அவர் தெரிவித்தார்.

அஸ்ஸாம் மாநிலத்தில் பல கிராமங்களில் சட்டவிரோத குடியேற்றம் நிகழ்ந்திருப்பதாக அவர் கூறினார்.

**கடந்த பத்தாண்டுகளில் சட்டவிரோத குடியேற்றத்தை தடுக்க, பிஜேபி அரசு உறுதியான நடவடிக்கைகளை எடுத்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.**

**அம்மாநிலத்தை வெள்ளச் சேதத்திலிருந்து பாதுகாக்க, அடுத்த ஐந்தாண்டுகளில் புதிய கட்டுமானப் பணிகள் நிறைவேற்றப்பட வுள்ளதாகவும் அமைச்சர் கூறினார்.**

**இம்மாநிலத்தில் சாலை போக்குவரத்து கட்டமைப்பு, சுற்றுலா மையங்கள் ஆகியவற்றை மேம்படுத்தவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.**

**தீவிரவாத பாதிப்புகளிலிருந்து மக்களை பாதுகாக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாகவும் திரு. அமித் ஷா கூறினார்.**

<<<<<<<<>>>>>>>

**இந்தியா -பெல்ஜியம் இடையிலான நல்லுறவை மேம்படுத்துவதில் Flanders மாகாணத்தின் தலைமை அமைச்சர் Mattias Diependaele முக்கிய பங்காற்றியிருப்பதாக மத்திய வர்த்தகம் மற்றும் தொழில்துறை அமைச்சர் திரு பியூஷ் கோயல் தெரிவித்துள்ளார்.**

**புதுதில்லியில் இன்று அவரை சந்தித்து பேசியபின் திரு பியூஷ் கோயல் வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், இருநாடுகளுக்கும் இடையிலான வர்த்தகம், துறைமுகங்கள், சரக்கு**

**போக்குவரத்து, மருந்துகள் மற்றும் ரசாயனங்கள், உயர் தொழில்நுட்பங்கள் ஆகியவற்றில் ஒத்துழைப்பை வலுப்படுத்த Mattias Diependaele முயற்சி எடுத்ததாக தெரிவித்துள்ளார்.**

**இந்தியா – பெல்ஜியம் இடையே பொருளாதார ஒத்துழைப்பு, புதிய கண்டுபிடிப்புகள்,மக்களுக்கு இடையிலான உறவுகளை வலுப்படுத்துவதிலும் அவர் முக்கிய பங்காற்றினார் என்றும் திரு பியூஷ் கோயல் கூறியுள்ளார்.**

**வடக்கு பெல்ஜியத்தின் டச்சு மொழி பேசும் மாகாணமாக Flanders உள்ளது.**

<<<<<<<<>>>>>>>

தமிழகத்தில் விமான கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கு தேவைப்படும் நிலத்தை மாநில அரசு கையகப்படுத்தித் தர வேண்டும் என்று சிவில் விமான போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு ராம்மோகன் நாயுடு கூறியுள்ளார்.

இன்று கோவை விமான நிலைய விரிவாக்கப்பணிகளை தொடங்கிவைத்த பின்னர் செய்தியாளர்களிடம் அவர் பேசினார்.

பயணிகளின் வசதிக்காக நூலகம் மற்றும் மலிவு விலை மருந்தக்கள் இன்று தொடங்கப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

தமிழகத்தின் விமான கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கு பிரதமர் கூடுதல் முக்கியத்துவம் அளித்துள்ளதாகவும் திரு ராம்மோகன் நாயுடு தெரிவித்தார்.

<<<<<<<<>>>>>>>

**இந்தியா – அமெரிக்கா இடையிலான இருதரப்பு வர்த்தக ஒப்பந்தம் விரைவில் இறுதி செய்யப்படும் என்று வெளியுறவுத்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.**

**புதுதில்லியில் செய்தியாளர்களிடம் இதனை தெரிவித்த அமைச்சகத்தின் செய்தித்தொடர்பாளர் திரு ரன்தீர் ஜெய்ஷ்வால், அடுத்த வாரத்தில் அமெரிக்காவுடன் பேச்சு நடத்துவதற்கு இந்திய குழுவினர் செல்ல இருப்பதாகவும் கூறினார்.**

**வெனிசுலாவில் இருந்து எண்ணெய் இறக்குமதி செய்வது குறித்து ஆராய்ந்து வருவதாக தெரிவித்த அவர், வர்த்தக ரீதியாக இந்தியாவுக்கு இது லாபகரமாக இருக்கும் என்றும் கூறினார்.**

**அண்மையில் நடந்த பங்களாதேஷ் தேர்தலில் வெற்றிபெற்று பிரதமராக பதவியேற்றுள்ள திரு தாரிக் ரஹ்மானுக்கு வெளியுறவுத்துறை சார்பில் தமது வாழ்த்துகளை தெரிவிப்பதாகவும் அவர் கூறினார்.**

மக்களவைத் தலைவர் திரு ஓம். பிர்லா, இந்தியா சார்பில் பங்களாதேஷ் பிரதமர் மற்றும் அவரது அமைச்சரவை பதவியேற்பு நிகழ்ச்சியில் கலந்துகொண்டார் என்றும் தெரிவித்தார்.

பங்களாதேஷில் ஜனநாயக ஆட்சி மலரவும், முன்னேற்றப் பாதையில் செல்லவும் இந்தியா தொடர்ந்து ஆதரவு அளிக்கும் என்றும் திரு ரன்தீர் ஜெய்ஷ்வால் கூறினார்.

<<<<<<<<>>>>>>>

ராஜஸ்தான் மாநிலம் ஜெய்பூரில் இந்திய விமானப்படையின் சிறப்பு மிக்க சாகச காட்சியை மக்கள் இன்று கண்டுகளித்தனர்.

சாரங் ஹெலிகாப்டர், சூரியகிரண், ஏரோபேட்டிக் அணியினர் நடத்திய விமான சாகசங்கள் மக்களை வெகுவாக கவர்ந்தன.

சாரங் படையின் ஐந்து ஹெலிகாப்டர்கள், இந்த சாகசத்தில் ஈடுபடுத்தப்பட்டன.

உள்நாட்டிலேயே இந்துஸ்தான் ஏரோ நாட்டிக்ஸ் நிறுவனத்தில் தயாரிக்கப்பட்ட இந்த ஹெலிகாப்டர்கள், வானில் துல்லியமாக சென்று தாக்கும் திறன் பெற்றவையாக உள்ளன.

தரையிலிருந்து குறைந்த உயரத்தில் பறப்பதிலும், ஒன்றிணைந்து செயல்படுவதிலும் திறன் மிக்கவைகளாக இந்த ஹெலிகாப்டர்கள் உள்ளன.

சூரியகிரண் ஜெட் விமான சேவையையும் மக்கள் கண்டுகளித்தனர்.

100 அடி உயரத்தில் இருந்து, ஆயிரம் அடி உயரம் வரை சாகச குழுவினர் பறந்து சாதனை படைத்தனர்.

உலக அளவில் 800-க்கும் மேற்பட்ட விமான சாகசங்கள், சூரியகிரண் விமான குழுவினரால் நடத்தப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

<<<<<<<<>>>>>>>

ஜார்கண்ட்டில் மூன்றாவது துணை நிதிநிலை அறிக்கையை அம்மாநில நிதியமைச்சர் திரு ராதாகிருஷ்ண கிஷோர் சட்டப்பேரவையில் இன்று தாக்கல் செய்தார்.

மாநிலத்தில் மேற்கொள்ளப்பட்டுவரும் பல்வேறு வளர்ச்சித் திட்டங்களுக்கு கூடுதல் நிதியாகவும், நிலுவையில் உள்ள திட்டங்களை முடிக்கவும் மொத்தம் 6 ஆயிரத்து 450 கோடி ரூபாய் நிதி மூன்றாவது கட்டமாக விடுவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிதியின்மூலம், மாநிலத்தின் வளர்ச்சிக்கான திட்டங்கள் முடுக்கிவிடப்படும் என்று மாநில அரசு தெரிவித்துள்ளது.

கேள்விநேரத்தின்போது, மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் தேவைகளுக்கான பல்வேறு கேள்விகளுக்கு அமைச்சர்கள் பதிலளித்தனர்.

<<<<<<<<>>>>>>>

அணுசக்தி ஒப்பந்தத்தில் ஈரான் விரைந்து முடிவெடுத்து கையெழுத்திட வேண்டும் என்று அமெரிக்க அதிபர் திரு டோனல்டு ட்ரம்ப் வலியுறுத்தியுள்ளார்.

வாஷிங்டனில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், 15 நாட்களுக்குள் ஈரான் இதுகுறித்து முடிவெடுக்காவிட்டால் கடுமையான விளைவுகளை அந்நாடு சந்திக்க நேரிடும் என்றும் கூறினார்.

எல்லைப்பகுதியில் நிறுத்தப்பட்டுள்ள அமெரிக்கப் படைகள் மீது ஈரான் தாக்குதல் நடத்தினால் தக்க பதிலடி தரப்படும் என்றும் அவர் எச்சரித்தார்.

பதற்றத்தை குறைக்கும் முயற்சிக்கு ஈரான் முன்வர வேண்டும் என்றும் திரு டோனல்டு ட்ரம்ப் கூறினார்.

<<<<<<<<>>>>>>>

பெங்களூருவில் நடைபெற்றுவரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் Vaishnavi Adkar அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

மகளிர் ஒற்றையர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில் அவர், 6-3, 1-6, 6-4, என்ற செட் கணக்கில், ஆஸ்திரேலியாவின் Taylah Pareston-ஐ வென்றார்.

----------------

உகாண்டா சர்வதேச சேலஞ்ச் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் ரகு மாரிசாமி காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

ஆடவர் ஒற்றையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் அவர், 21-9, 21-7 என்ற செட் கணக்கில், ஐக்கிய அரபு எமிரேட்ஸின் Shashaank Sai Munnaigi-ஐ வென்றார்.

Lakshay Sharma, Gagan Palyan, Saneeth Dayanand, Anupama Upadhayaya, Mansi Singh, Vennala Kalagotla ஆகியோரும் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு தகுதி பெற்றுள்ளனர்.

சிங்கப்பூர் Smash டேபிள் டென்னிஸ் போட்டியின் இரண்டாவது தகுதி சுற்று ஆட்டத்தில் இந்தியாவின் ஹர்மீத் தேசாய் வெற்றிபெற்றார்.

<<<<<<<<END>>>>>>>